DINAMANI 21 JUL 09

# ஈஷா யோக மையம் சார்பில் இலவச மருத்துவ முகாம்

கோவை ஜூலை 20: ஈஷா யோக மையம் சார்பில் பெரியகுயிலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இலவச மருத்துவ முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கோவை லோட்டஸ் கண் மருத்துவமனை, ராமகிருஷ்ணா பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றுடன் இணைந்து இம் முகாம் நடைபெற்றது.

பச்சாபாளையம் ஊராட்சித் தலைவர் என்.விஜயகுமார் முகாமை துவக்கிவைத்தார்.

மருத்துவர்கள் மனோபிரியா, கோபிநாத் ஆகியோர் பங்கேற்றனர்.

300-க்கும் மேற்பட்டோருக்கு மருந்து, மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டன.